JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.105/2021 Date: 21-06-2025 P.W. 4 / LW 4

| | |
|---|---|
| பெயர் | திரு. பசுபதி |
| தந்தை பெயர், க/பெ | திரு. நாராயணசாமி |
| முகவரி | நெ.38/81 அசோக் நகர் புது வண்ணாரபேட்டை, சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 21st day of June 2025.

எதிரி தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS கீழ் வழக்கு தாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.2 மகள் தான் அ.சா.1 ஆகும். அ.சா.2 கடந்த 30 வருடங்களாக தெரியும். அ.சா.1 எதிரி பெஞ்சமின் என்பருக்கும் திருமணம் நடைபெற்றது எனக்கு தெரியும். 2017 ம் வருடம் அ.சா.2 எனக்கு போன் செய்து அவரது மகளுக்கு நிச்சயதார்த்தம் வைத்திருப்பதாக கூறி என்னை அழைத்தார். நிச்சயதார்த்தமானது அ.சா.2 வீட்டில் நடைபெற்றது. பெண் வீட்டாரும் மாப்பிளை வீட்டாரும் வந்திருந்தார்கள். நிச்சயதார்த்தம் முடிந்த உடன் அவர்கள் உறவினர்கள் முன்பு அ.சா.2 பூமணி மாப்பிளை வீட்டாருக்கு மாப்பிளையும் தாயாரிடம் ரூ.6 லட்சம் ரூபாய் பணமாக வரதட்சனை வாங்கியதாக கொடுத்தார். இதற்கு முன்பும் எதிரியின் வீடு கன்னியாகுமரியில் உள்ளதாகவும் வீடு பூச்சி வேலைக்கு ரூ. 2 லட்சம் தேவைப்படுவதாக கூறி மாப்பிளையின் தாயார் வாங்கியதாக பூமணி என்னிடம் கூறினார். நான் நிச்சயதார்த்ததின் போது 6 லட்சம் ரூபாய் வாங்கியதை பார்த்தேன். 2 லட்சம் ரூபாய் பூச்சி வேலைக்கு வாங்கியது பூமணி சொல்லி தான் எனக்கு தெரியும். திருமணம் நல்ல முறையில் நடந்து அம்பத்தூரில் உள்ள ஷாம் மகாலில் நடைப்பெற்றது. அதன்பின்பு 2019 ல் அ.சா.2 மகளுக்கு பெண் குழந்தை பிறந்தது. அதன்பின்பு பூமணி போன் செய்து அவரது வீட்டிற்கு வரசொன்னார். அப்பொழுது அவருடைய மகளும் வீட்டில் இருந்தார். என்னவென்று கேட்டதற்கு எனது மகள் கொடுக்கையூரில் தான் மாப்பிளை உடன் வசித்து வருவதாகவும், மாப்பிளைக்க தன்னி அடிக்கும் பழக்கம் உள்ளதால் மாமியாருக்கு டிக் டாக்கில் வீடியோ போடுவதாகவும் சினிமாவில் துணை நடிகராக அவர் மாமியார் நடிப்பதாகவும் அவரது மகளை

அவ்வப்போது அடித்து துன்புறுத்தியதாகவும் எதற்கு என்று கேட்டபோது அவரது மகளின் நகையை வாங்கி 40 சவரன் நகையை மாமியார் வீட்டில் அடகு வைப்பதாகவும் அதை கேட்டபோது எனது மகளை அடித்து துன்புறுத்தி வீட்டிற்கு அனுப்பி விட்டதாக கூறினார்.

அதன் பின்பு அவரது மகள் கர்ப்பமாக இருந்தார். குழந்தை பிறந்து 7 மாதம் கழித்து குழந்தையுடன் மாப்பிளை வீடு கொடுக்கையூருக்கு அழைத்து சென்ற போது அங்கு மாமியார், கொழுந்தனார், மாமனார், மருமகன் ஆகியோர்கள் வீட்டில் சேர்க்காமல் பெண் குழந்தை எங்களுக்கு ஆகாது என்று கூறி அனுப்பிவிட்டார்கள். அதன்பின்பு அவரது மருமகனையும் மகளையும் பெருக்குடியில் ரூ.80,000/- அட்வான்ஸ் வீடு வாடகை எடுத்து இருவரையும் அங்கு குடியமர்த்தினார். அங்கு அ.சா.2 ன் மருமகன் வேலை செய்து இடத்தில் பிரச்சனை செய்து விட்டதால் வேலை இல்லாமல் வீட்டில் இருந்து கொண்டு பெண்ணின் நகையை அடமானம் வைத்து அதையும் மது அருந்திவிட்டு உங்கள் அப்பாவிடம் சென்று ரூ.5 லட்சம் ரூபாய் வரதட்சனை வாங்கி கொண்ட வா அடித்து துன்புறுத்தியுள்ளார். அடி தாங்காமல் அிந்த பெண் அவரது அப்பா வீட்டிற்கு வந்து விட்டது. அதற்க முன்பு மாப்பிளை வீட்டில் கார் கேட்ட போது ரூ.2,20,000/- ஐ நகையை அடமானம் வைத்து கார் வாங்குவதற்காக பூமணி கொடுத்திருந்தார். அதன்பின்பு அம்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். திருவள்ளூரில் சமூகநலத் துறையில் விசாரணைக்காக அழைத்திருந்தார்கள் நானும் சென்றிருந்தேன். அப்போது பெஞ்சமினும் அவரது தம்பி பிரேம் ம் வந்திருந்தார்கள் அப்பொழுது நான் அவர்களிடம் 12 லட்சம் ரூபாய் வாங்கிய பணத்தையும், 16 சவரன் தரவேண்டிய நகையும் கொடுத்து விட்டு சமாதானமாக போங்கள் என்று கூறினேன். அதற்கு அவர்கள் எனக்கு 100 ரவுடிகளை தெரியும் பூமணியையும் அவரது மகளையும் கொலை செய்து விடுவதாகவும் உன் வேலையை பார்த்து கொண்டு போடா என்று என்னையும் மிரட்டினார்கள். மேலும் 2021 ல் கொடுக்கையூரில் உள்ள அவர்களது வீட்டை விற்று விட்டு சென்று விட்டார்கள். அந்த வீட்டை காட்டி தான் பூமணியின் மகளை திருமணம் செய்தார்கள். இது சம்பந்தமாக அவர்கள் பேசிய உறையாடலின் நகலை நீதிமன்றத்தில் பூமணி சமர்ப்பித்துள்ளார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**மறு விசாரணை** / **இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur